## சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2- 2018

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் - 2 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 மார்ச் 31 ஆந் திகதிய 4500062212011110472 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போதைய நெடுஞ்சாலைகள் முன்னால் நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. முன்னுரிமை வீதியின் 619.72 கிலோமீற்றர்களை முன்னேற்றம் செய்து மீளமைத்தல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 61,438 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 556 மில்லியனானதுடன் இதில் ரூபா 55,250 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 500 மில்லியன் சீன அபிவிருத்தி வங்கிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 ஜுன் 28 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 ஜுன் 28 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும் கடன் காலம் மீளளிப்புக்காலம் முடிவடையும் வரை நீடிக்கப்பட்டிருந்தது

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2015 ஜுன் 22 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூடும் நிதிக்கூற்றுக்கள் செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உண்மையான நிதி செயலாற்றலினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படாமலிருக்கலாம். | கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்டது போல் மூடும் அறிக்கை தயாரிக்கப்பட்டது. | மூடும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பதுளை – கரமெட்டிய – அந்துல் பொல வீதி மற்றும் தென்னங்கும்பர – ரிகில்லாகஸ்கட – ராகல வீதி என்பன 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தும் கூட அது வெள்ளத்தினால் சேதமடைந்திருந்ததுடன் செயற்திட்டத்தின் வேலைப்பரப்பு அடையாளப்படுத்தப்படாமல் ரூபா 132 மில்லியன் கிரயத்தில் சீரமைப்பிற்காக வழங்கப்பட்டிருந்தது. ரூபா 19.48 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 இல் சீரமைப்புக்கள் பூர்த்தி செய்யப்படாமலிருந்தும், முற்பணம் ஓர் முற்பணமாக அடயாளப்படுத்தப்படாமல் 2015 ஆம் ஆண்டில் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | நடைமுறை வெலையில் மிகை மதிப்பீடு. | வீதி அபிவிருத்தி அதிகார சபை இது பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் வசதியினை உறுதிப்படுத்த அவசரமானதும் முக்கியமானதுமான ஓர் வேலையாக காணப்பட்டதனால் சேதமடைந்த வீதி பிரிவுகளின் திருத்தத்திற்காக ஓர் முற்பணத்தினை செலுத்தவேண்டியிருந்தது. | செலுத்தப்படாத மீதிகள் ஒப்பந்ததாரரிடமிருந்து மீளப்பெறப்படல் வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 56.6 மில்லியன் தொகையான காசு மீதி மீளாய்வாண்டின் போது காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும், அதே தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ஓர் நிதியீட்ட | பதிவு செய்யப்படாத காசு மீதிகள் முறைகேடாக பயன்படுத்தக்கூடும். | டிஏபீ மற்றும் நட்புரீதியான தீர்ப்பனவு செயன்முறையில் தாமதம் போன்ற காரணத்தினால் பணம் முழுமையாக பயன்படுத்தமுடியாமலிரு | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கையாக காட்டப்படாமல் 2018 சனவரி 23 இல் தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | | ந்தது, எனவே ஆர்டிஏவின் பணிப்பாளர் நாயகம் மீதியாக காணப்படும் 56.6 மில்லியனை ஈஎஸ்ஈபி செயற்திட்டத்திற்கு மாற்ற அனுமதி வழங்கியிருந்தார். | |
| (ஈ) | நாட்குறிப்பு பதிவு இல.07 இன் பிரகாரம், ஏழு ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ரூபா 145 மில்லியன் பெறுமதியான தேறிய சொத்துக்கள் மற்றும் மூன்று ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ரூபா 13 மில்லியன் செலவு தொகை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட கணக்கீட்டு சொத்தாக காட்டப்படாமல் மிளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது. இருப்பினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்பட்டதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் போது எவ்வித சொத்துக்களும் மாற்றல் செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைவான பதிவுகளின் காரணமாக சொத்துக்கள் தவராக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | அந்நிலையான சொத்துக்கள் ஒவ்வொரு செயற்திட்டத்தினாலும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட நேரத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முறையாக மாற்றம் செய்யப்பட்டிருருந்தது. | உரிய / தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்கள் சரியான நேரத்தில் பதிவு செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டமானது தேசிய வீதிகளின் 504.90 கி.மீ மற்றும் மாகாண வீதிகளின் 85 கி.மீ, 02 மேம்பாலங்கள் நிர்மானம், 46 பாலங்களை விரிவுபடுத்தல் மற்றும் புனரமைத்த போன்றவற்றிற்கு திட்டமிட்டிருந்தும், தேசிய வீதிகளின் 514.10 கி.மீ கள் மற்றும் மாகாணவீதிகளின் 105.62 கி.மீ கள் மற்றும் இரண்டு பாலங்கள் மாத்திரமே பூர்த்தியடைந்திருந்தன. | செயற்திட்டத்தினால் தேவையற்ற செலவினங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். | வீதிகளின் வேலைகளின் மிகுதி புனரமைப்பினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | வீதி அபிவிருத்தி அதிகார சபை மாறல் கட்டளைகள் மற்றும் பிணக்கிணக்க சபையின் விடயங்கள் போன்றவற்றை தீர்க்க இரண்டு உள்நாட்டு வங்கிகளிடமிருந்து இரண்டு மேலதிக கடன்களினை பெற்றிருந்தது, எனவே செயற்திட்டமானது செயற்திட்டத்தின் குறித்த நோக்கங்களை அடைவதற்கு நிதியினை சமாளிக்க தவறியிருந்தது. எனவே, ரூபா 2,900.06 மில்லியன் செலுத்தவேண்டிய கடன் மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | தேவையற்ற செயற்திட்ட முகாமைத்துவ கிரயம், அதனடிப்படையிலான மாறல் கட்டளைகளை ஏற்றுக் கொள்வதனால் ஏற்படக்கூடும். | உடன்பட்டனர். | எதிர்கால செயற்திட்டத்தில், நிதி முகாமைத்துவம் செயற்திட்டத்தின் திட்டமிடப்பட்ட குறிக்கோள்களிற்குள் காணப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட நிதிகளினூடாக கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறை அல்லாச் சொத்துக்கள் நல்ல நிலமையில் வேலை வழங்குனரிற்கு திருப்பி வழங்கப்படல் வேண்டும். ஆனால் ஒப்பந்ததாரரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்ட சொத்துக்களிற்கும் ஒப்பந்ததாரரினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிற்குமிடையே ரூபா 117 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது | குறைவான பதிவுகளினால் சொத்துக்கள் முறைகேடாக பயன்படுத்தக்கூடிய சாத்தியம். | ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் நிலஅளவை உபகரணங்கள் கூட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்தது. | கிரயங்களின் வெளிப்படுத்தல்கள் இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களுடன் உடன்படல் வேண்டும். |